மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDARM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

Double-Blind Peer-Reviewed | Open Access

E-ISSN: 3049-3676 (ONLINE)

Bimonthly | Online Publication | Tamil Language

Published: 23.08.2026

Volume 9 | Issue 9 | July – August 2026

# Cultural Records in Kalithogai

Research Scholar M.Sowndariya

Ph.D Scholer (Full Time) ,
Government Arts College (Autonomous) Coimbatore 18.
Sowndariyaan2d@gmail.com - 7339268010

Supervisor Dr. E. Senavarayan

Associate Professor,Department of Tamil
Government Arts College (Autonomous) Coimbatore 18
senavarayantamil@gacbe.ac.in - 9486772491

**Abstract**

Sangam literary works serve as a repository that transmits the life and culture of the Tamil people across generations. They document various aspects of life, including individual conduct, family life, valor, chastity, and pastimes. Sangam literary texts contain numerous insights relevant to people living in today's technologically advanced world. The objective of this article is to examine the cultural elements recorded in the poems of Kalithogai.

**Keywords**: Kalithogai, culture, hospitality, chastity.

# கலித்தொகையில் பண்பாட்டுப் பதிவுகள்

**ஆய்வாளர் மு.சௌந்தரியா**
**முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)**
**அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கோயமுத்தூர் – 18.**
Sowndariyaan2d@gmail.com - 7339268010

**ஆய்வு நெறியாளர் முனைவர் இ. சேனாவரையன்**
**இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கோயமுத்தூர்-18.**
senavarayantamil@gacbe.ac.in – 9486772491

## ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கிய நூல்கள் தமிழர்களின் வாழ்வையும், பண்பாட்டையும் பலதலைமுறைகளுக்கு கொண்டு செல்லக்கூடிய

கருவூலப் பெட்டகமாகத் திகழ்கிறது. இதில் தனிமனித ஒழுக்கம், குடும்பம், வீரம், கற்பு, விளையாட்டு என பல தகவல்கள் பதிவாகியுள்ளன. இவை அனைத்தும் தற்கால தொழில்நுட்ப உலகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் மக்களுக்குத் தேவையான பல செய்திகளை உள்ளடக்கியதாக சங்க இலக்கிய நூல்கள் திகழ்கின்றன. கலித்தொகைப் பாடல்களில் பதிவாகியுள்ள பண்பாட்டுக் கூறுகள் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொல் :** கலித்தொகை, பண்பாடு, விருந்தோம்பல், கற்பு.

## முன்னுரை

.இலக்கியம் என்பது ஒரு நாட்டின் பண்பாட்டுப் படைப்புகளில் ஒன்றாகும். இலக்கியம் என்பது விழுமிய சிந்தனைகளின் கருவூலமாகவும், வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும், உள்ளத்தைப் பண்படுத்தும் உயர் படைப்பாகவும், உணர்வுகளைத் தூய்மைப்படுத்தும் எழுத்தோவியமாகவும், மனிதநேயத்தைப் புகட்டும் நல்லாசானாகவும் இலக்கியங்கள் திகழ்கின்றன. சங்க இலக்கிய நூல்களுள் 'பா' வகையினால் சிறப்புப் பெற்ற கலித்தொகை அகநூல்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. கலிப்பாவின் இனிமையை தமிழ்ச்சான்றோர்க்கு உணர்த்தும் வகையில் ஐம்பெரும் புலவர்கள் ஐவகைத் திணைகளைப் பாடியுள்ளனர். 'கலி' என்னும் சொல்லிற்கு களிப்பு, களிப்பின் பெருக்கு, ஆரவாரம் எனப் பலப் பொருளுண்டு. பாடலின் அல்லது செய்யுளின் தொகுப்பினை தொகை என்பர். கலித்தொகையில் உள்ள பாடல்கள் அனைத்தும் கலிப்பாவினால் அமைந்துள்ளதால் கலித்தொகை என்னும் பெயர் பெற்றது. இதில் பொதிந்துள்ள பண்பாடுகள் குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

## பண்பாடு

மனிதனை விலங்கினத்திலிருந்து வேறுபடுத்திக்காட்டுவது பண்பாடாகும். பண்பாடு என்றால் பக்குவப்படுத்துதல் அல்லது சீர்படுத்துதல் என்றுப் பொருள். தொழில் நுட்பம், பொருளாதாரம், சமூக அமைப்பு, சமயம், மொழி, கலைகள் ஆகியவை பண்பாட்டின் அம்சங்களாகும்[1]. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் தங்களின் வாழ்க்கையை ஒரு சில விதிமுறைகளுக்கு உட்பட்டு நடத்தும் போது பண்பாடு தோன்றுகிறது.

## கற்பின் மாண்பு

ஒரு பெண்ணின் உயிரை விட நாணம் சிறந்தது. அந்த நாணத்தை விட கற்பு சிறந்தது என தொல்காப்பியர் '**உயரினும் சிறந்ததன்று நாணே நாணினும் செயிர் தீர்காட்சிக் கற்புச் சிறந்ததன்று**' தனது நூற்பாவில் கூறுகின்றார்.[2] தலைவியின் கற்பு எத்தகையது என்பதை உணர்த்தும் விதமாக,

**'வடமீன் போல் தொழுது ஏத்த வயங்கிய கற்பினாள்'**

**(கலி.பாலை.2,21)**

இப்பாடலடி அமைந்துள்ளது. அருந்ததியைப் போல எல்லோரும் தொழுது போற்றும் படி விளங்குகின்ற கற்பினை உடைய தலைவி மழை பெய்யும்படி வேண்டினாள் மழையும் பெய்யும். இதனை,

**தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**

**பெய்யெனப் பெய்யும் மழை (திருக்குறள் 55)**

எனத் திருவள்ளுவரும் கூறியுள்ளார். இவ்வுலகமே பரிசாகக் கிடைத்தாலும் கூட, ஆயர்குலப் பெண்கள் முதலில் காதலித்த

கணவனை கைவிட்டு மற்றொரு ஆடவரை திருமணம் செய்து கொள்ள மாட்டார்கள் என்பதை,

**விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்**

**அருநெறி ஆயர் மகளிர்க்கு**

**இருமணம் கூடுதல் இல் இயல்பு அன்றே**

**(கலி.முல்.114,19-21)**

என்ற பாடல் சுட்டுகிறது. இதே கருத்தை குறுந்தொகை பாடலொன்று வேறு விதமாக கூறியுள்ளது.

**இம்மை மாறி மறுமை ஆயினும்**

**நீ ஆகியர் எம்கணவனை**

**யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே (குறுந்தொகை.பா.49)**

இப்பிறப்பு மட்டுமின்றி மறுபிறவி எடுத்தாலும் கூட நீயே என் கணவனாகவும், நானே உன் நெஞ்சில் நிலைத்தவளாகவும் இருக்கவேண்டும் எனத் தலைவிக் கூறுவதில் என்றுமே ஒருவருக்கு ஒருத்தியாக இருக்கவேண்டும் என நினைக்கின்ற தலைவியின் மன அழகினை படம் பிடித்துக் காட்டும் விதமாக இப்பாடல் அமைந்துள்ளது.

**'இருதலைப் புள்ளின் ஓருயிரம்மே'**

**(கலி.பாலை.12,5)**

**'ஒருயிர்ப் புள்ளின இருதலையுள் ஒன்று**

**போர் எதிர்ந்து அற்றாப் புலவல் நீ கூறின்எம்**

**ஆருயிர் நிற்குமாறு யாது**

**(கலி.மரு.89,4-6)**

ஈருடல் ஓருயிராக உள்ளம் ஒன்றுபட்டு வாழக் கூடிய காதலர்களை இருதலைப்புள் என்ற பறவையோடு ஒப்பிட்டு அன்பிற்கு இலக்கணமாக கூறுகின்றனர்.

## விருந்தோம்பல் பண்பாடு

குடும்பக் கட்டமைப்பில் உலகச் சமூகத்திலிருந்து தனித் தன்மையோடு விளங்குவது தமிழ்ச்சமூகமாகும். உண்மையான அன்பு கொண்ட காதலர்களையே எவ்வளவு தீமைகள் உட்புகுந்தாலும் பிரியமாட்டார்கள். அதனால் தான் தலைவன் பரத்தையர்களோடு சேர்ந்து உல்லாசமாக வாழ்ந்துவிட்டு மீண்டும் தலைவியிடமே வந்தாலும் கூட தலைவி இல்லற வாழ்வின் பொருட்டு அவனை மீண்டும் ஏற்றுக் கொண்டு வாழ்கின்றாள். இல்லறத்தை நிர்வாகம் செய்தல், புதல்வர்களை வளர்த்தல், சுற்றத்தை ஓம்பல் போன்ற கடமைகளை சிறப்பாக செய்து இல்லத்தை ஆள்வதால் தான் தலைவியை **இல்லாள்** என அழைக்கின்றனர்.[3]

மனிதன் உயிர் வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாக விளங்குவது உணவாகும். அதனால் தான் '**உண்டிக் கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**' என புறநானூறு கூறுகின்றது[4] ஆதிகாலத்தில் மனிதனுடைய தேடல் உணவுக்காக மட்டுமே இருந்தது. முதலில் தனக்காகவும், தனது சுற்றத்திற்காகவும் தேடிய உணவுபொருட்களை முன்பின் அறியாத மக்களுக்கு வழங்கும் போதுதான் அது விருந்தோம்பல் பண்பாடாக மலர்ந்தது. விருந்தோம்பல் என்பது மனையில் நிகழக்கூடியது. அதனால் குடும்பத்தை நிர்வாகம் செய்யக் கூடிய குடும்பத்தலைவியே விருந்தோம்பல் பண்பாட்டிற்கான பொறுப்பினை ஏற்கிறாள்.

இதனை,

**'விருந்த புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**

**பிறவுமன்ன கிழவோள் மாண்புகள்'**

**(தொல்காப்பியம்,பொருள்,கற்பியல் நூற்பா:185)**

எனத் தொல்காப்பியர் தனது நூற்பாவில் கூறுகிறார். தலைவி ஆற்றக் கூடிய கடமைகளில் மிகவும் உயர்வாக விளங்குவது 'விருந்தோம்பல்' பண்புதான். ஏனென்றால் இக்கடமையில் தான் பிற உயிர்களை தன்னுயிர் போல் கருதக் கூடிய மிக உயர்ந்த மனித நேயம் காணப்படுகிறது. இருப்பதிலேயே மிகவும் கொடுமையான நோய் பசிப்பிணிதான். அந்த நோயை போக்கக் கூடிய ஒரே மருந்து உணவு மட்டும்தான். அந்த உணவை கொடுத்து பிற உயிரை வளர்க்கக் கூடிய தலைவியே மிகச் சிறந்த இல்லாள் ஆவாள். விருந்திற்காகத் தலைவி ஊடலையும் விடுத்துள்ளாள் என்பதை,

**'விருந்து எதிர்கோடலின் மறப்பல்' (கலி.மரு.75,17)**
**'விருந்து எதிர் கொள்ளவும்' (கலி.மரு.75,27)**

என்னும் அடிகளின் மூலம் அறியலாம்.

## அறப்பண்பாடு

ஆர்க்கின்ற காளையை அடக்குவதற்காக நெஞ்சுரம் பெற்றோர் அஞ்சாது சூழ்கின்றனர். அவருள் ஒருவன் காளையைக் கைப்பற்றும் போது கைவழுக்கிக் காளையின் முன்னே போய் விழுகின்றான். இக்காளையோ தன் முன்னே வீழ்ந்து கிடக்கின்றவனை நோக்காது, தன்னை நோக்கி வருபவனைப் பதம்பார்க்கத் துடிக்கிறது. இதனை,

**கோள் வழுக்கித் தன்முன்னர் வீழ்ந்தான்முற் செல்லாது**
**மீளும் புகர் ஏற்றுத் தோற்றம் காண் மண்டு அமருள்**
**வாள் அகப்பட்டானை ஒவ்வான் எனப்பெயரும்**
**மீள மறவனும் போன்ம் (கலி.முல்.104,46-49)**

இப்பாடல் சுட்டுவதன் மூலம் கடும்போரில் தன் வாளுடன் ஒரு வீரன் சரண் அடைந்துவிட்டால், உண்மையான வீரன் அவனைத் துன்புறுத்தமாட்டான். அதுபோல தன் முன்னே வீழ்ந்த பொதுவனைக் காளை முட்டாது செல்வது தமிழரின் வீரத்தையும், விவேகத்தையும் ஒரு சேர உணர்த்தும் ஓர் எழில் மிகு காட்சியாக உள்ளது.

பொருளற்ற வறியவனின் இளமை பொலிவற்று வாடுவது போல, வாடிய தளிர்களை கொம்புகள் பெற்றிருந்தன. கொடுத்தற்கு மனமில்லாத சிறுமையுடையவனது செல்வம் போல் தன்னை அடைந்தவர்க்கு நிழல் தராது, யாவரிடத்தும் நெறிகடந்து தீமை செய்து, புகழ் ஒழிந்தவனது இறுதிக்காலத்தில் அவனது சுற்றமே அன்றி அவனும் கெடுமாறு போல, மரம் கிளையே அன்றி வேரோடு வெம்புமாறு கதிர்கள் சுட்டன.

**வறியவனின் இளமைபோல் வாடிய சினையவாய்ச்**
**சிறியவனின் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழலின்**
**யார்கண்ணும் இகந்துசெய்து இசைகெட்டான் இறுதிபோல்**
**வேரோடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதலின்**

**(கலி.பாலை.10,1-4)**

என்றும்,

**மடியிலான் செல்வம்போல் மரம்நந்த அச்சொல்வம்**
**படிஉண்டார் நுகர்ச்சிபோல் நல்சினை மிஞிறு ஆர்ப்ப**

**(கலி.பாலை.35,1-2)**

என்னும் பாடலில் சோம்பலின்றி ஊக்கமுடையவனிடத்துச் செல்வம் பெருகுவது போல் மரங்களில் பூக்கள் நிறைய மலர்ந்தன. முயன்று ஈட்டிய செல்வத்தைத்தான் வருந்தபடி பெற்று உண்பாரது நுகர்ச்சி போல் மரக்கிளையிலே உள்ள தேனை உண்டு வண்டுகள் ஆர்ப்பரித்தன எனக் கூறியுள்ளான் கவிஞர். அதேப் போன்று, வறுமைத் துன்பத்தால்

ஒருவனை இரந்து வேண்டுகின்றவனது மனம் போல, மரங்களெல்லாம் பொலிவிழந்து வாடிக் குவிந்தன என்பதை,

**இரப்பவன் நெஞ்சம்போல் புல்லென்று புறம்மாறிக்**

**கரப்பவன் நெஞ்சம்போல் மரம் எல்லாம் இலைகூம்ப**

**(கலி.நெய்.120,5-6)**

இப்பாடலின் வழி நல்லந்துவனார் சுட்டுவதில் இரப்போரின் மன இயல்பினை அழகாக சித்தரித்துள்ளார். அதேப் போன்று, வறுமையால் பொருள் இன்மையைச் சொல்லி இரந்தவர்க்கு பொருள் கொடுத்து நிறைதலைச் செய்யாத போது தன் உடம்பைத் துறந்துவிடுவான் என்பதை,

**......................................இடும்பையால்**

**இன்மை உரைத்தார்க்கு அதுநிறைக்கல் ஆற்றாக்கால்**

**தன் மெய் துறப்பான் (கலி.குறி.43,23-27)**

என்னும் பாடலிலும்,

**செறாஅது ஈதல் இரந்தார்க்கு ஒன்று ஆற்றாது வாழ்தலின்**

**சாதலும் கூடுமாம் மற்று (கலி.குறி.61,11-12)**

என்னும் பாடலின் மூலமும் சுட்டுகின்றார்.

மக்கள் தம் உயர் பிறவிக்கு ஏற்ப எவ்வாறு ஒழுக வேண்டும் என்பதை நெய்தற்கலியில் இவர் கூறும் அழகு போற்றத்தக்கது.

**ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்**

**போற்றுதல் என்பது புணர்ந்தோரைப் பிரியாமை**

**பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்**

**அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை**

**அறிவு எனப்படுவது பேதையார் சொல்நோன்றல்**

**செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை**

**நிறை எனப்படுவது மறைபிறர் அறியாமை**

**முறை எனப்படுவது கண்ணோடாது உயிர் வெளவல்**

**பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்**

**(கலி.நெய்.133,6-14)**

என்னும் பாடலின் வழி இல்வாழ்க்கை நடத்துதல் என்பது வறியவர்க்கு ஏதேனும் உதவி செய்தலாகும், பாதுகாத்தல் என்பது புணர்ந்தவரை பிரியாதிருத்தல், மக்கட் பண்பு என்பது உலக ஒழுக்கம் அறிந்து ஒழுகுதல், அன்பு என்பது தனது சுற்றத்தாரை கெடாது இருத்தல், அறிவு என்பது அறியாதார் தன்னிடம் கூறும் சொற்களைப் பொறுத்துக் கொள்ளுதலாகும், உறவு என்பது தன்னிடம் நெருக்கமுடையவர் கூறிய சொல்லை மறுக்காதிருத்தல், நிறை என்பது மறைவாக உள்ள ஒரு செயலை பிறர் அறியா வண்ணம் பார்த்துக் கொள்வதாகும், முறை என்பது நம்மவர் என்னும் கண்ணோட்டம் பார்க்காமல் குற்றம் செய்தவர்க்கு தண்டனை வழங்குவதாகும், பொறை என்பது பிறர் செய்தப் பிழைகளைப் பொறுத்துக் கொள்ளும் குணமாகும் என ஒரே பாடலில் பல்வேறு கருத்துக்களை புலவர் நயம்படக் கூறியுள்ளார்.

**தமக்குஇனி தென்று வலிதின் பிறர்க்குஇன்னா**

**செய்வது நன்று ஆமோ மற்று?** **(கலி.குறி.62,7-8)**

தமக்கு இனிதாய் இருக்குமென்று கருதிப் பிறர்க்குத் துன்பம் தரும் செயல்களைச் செய்தல் இன்பத்தைத் தராது என்பதை இப்பாடலடிகள் உணர்த்துகின்றன. மேலும், பிறருடைய நோயையும் தம்முடைய நோய்போல் எந்நாளும் காத்து அறனறிந்து ஒழுகுதல் சான்றோரின் கடமையாகும் என்பதை,

**பிறர்நோயும் தம்நோய் போல் போற்றி அறனறிதல்**

**சான்றவர்க்கு எல்லாம் கடன் (கலி.குறி.39,2-3)**

இவ்வடிகள் சுட்டுகின்றன. இக்கருத்தையே திருவள்ளுவரும்,

**சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா**

**செய்யாமை மாசுஅற்றார் கோள் (திருக்குறள் : 311)**

என்றும்,

**அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்**

**தம்நோய்போல் போற்றாக் கடை (திருக்குறள் : 315)**

இன்னா செய்யாமை என்னும் அதிகாரத்தில் வலியுறுத்துகின்றார்.

## தலைவனின் வீரம்

தலைவனின் பிரிவினை ஆற்றாத தலைவிக்கு தோழி திருப்பரங்குன்றத்தின் மேல் தலைவனுக்காக நடைபெறும் விளையாட்டைக் காண தலைவன் விரும்பிவருவார் என ஆற்றுவிக்கிறாள். இதில் முருகனின் வீரம் சொல்லப்படுகின்றது.

**ஒன்னாதார்க் கடந்தடூஉம் உரவுநீர் மாகொன்ற**

**வென்வேலான் குன்றின் மேல் (கலி.பாலை.27,15-16)**

இப்பாடலில் பகைவரை மாயம் செய்து கடலிடத்தே மாமரமாய் மறைந்து நின்ற சூரனை வெற்றிவேலை எறிந்து கொன்றான் முருகன் எனத் தோழி கூறுவதில் முருகனின் வீரம் வெளிப்படுகின்றது. மேலும்,

**முகையின்மேல் தும்பி யிருக்கும் பகையெனின்**

**கூற்றம் வரினும் தொலையான் தன் நட்டார்க்குத்**

**தோற்றலை நாணாதோன் குன்று (கலி.குறி.43,9-11)**

என்பதில் தனக்குப் பகையென்று கூறினால் கூற்றுவன் எதிர்த்துப் போர் செய்யவரினும் தோற்கமாட்டான். ஆனால் தன்னிடம் நட்புக் கொண்டவரிடத்து தோல்வியுறுவதற்கு நாணமாட்டான். இவ்வாறு வீரம் கொண்டவன் தலைவன் என முல்லைக்கலியில் ஏறுதழுவுவோரின் வீரம் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. அதே போன்று,

**கோட்டோடு சுற்றிக் குடர்வலந்த ஏற்றின்முன்**

**ஆடிநின் றக்குடர் வாங்குவான் பீட்காண்** (**கலி.முல்.**103,28-29)

இதில் குடர்கள் சுற்றிய கொம்புகளுடன் வந்த எருதுகளின் முன்னே பொதுவன் ஆடிநின்று அக்குடரை இருகைகளால் வாங்கி தன் வயிற்றிலே இருப்பான் என்பதில் எதற்கும் அஞ்சாத ஆயர்களின் மனதைரியம் அழகாக வெளிப்படுகின்றது.

## முடிவுரை

சங்க காலம் தொடங்கி தற்காலம் வரை தமிழ் சமூகத்தில் காலத்திற்கேற்ப பல்வேறு மாற்றங்கள் மக்களிடையே வந்துள்ளது. ஆனாலும் இன்று வரை மக்கள் தங்களின் பண்பாடான விருந்தோம்பல், ஏறுதழுவுதல், திருமணம், அறநெறி வாழ்வு என பல்வேறு முறைகளை கடைபிடித்து வாழ்ந்து வருகின்றனர். நாகரீக வளர்ச்சிக்கு ஏற்றார்போல மக்கள் மாறினாலும் கூட இன்றும் கலாச்சாரம் பின்பற்றப்பட்டுதான் வருகின்றது என்பதில் ஐயமில்லை. இன்றும் பல இடங்களில் ஜல்லிக்கட்டு என்ற பெயரில் ஏறுதழுவுதல் நடக்கின்றது. இல்வாழ்க்கையில் விருந்தோம்பல், குழந்தை வளர்ப்பு போன்ற முக்கிய பொறுப்புகளை இல்லாள் தான் ஏற்று நடத்துகிறாள். எனவே காலத்திற்கேற்ப வசதிகள் மாறினாலும் இன்றும் மக்களின் மனதில் பண்பாடு வேரூன்றி நிற்கிறது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக நம்மால் அறியமுடிகின்றது.

## அடிக்குறிப்பு

1. தமிழ் விக்கிப்பீடியா, பண்பாடு, இணையதளம்.
2. தொல்காப்பியம், களவியல், நூற்பா:23
3. சமூக நோக்கில் சங்க மகளிர், K.P.அழகம்மை, மணிவாசகர் பதிப்பகம், பக்கம். 75
4. புறநானூறு பாடல்: 18

## துணைநூற்பட்டியல்


1. பொ.வே.சோமசுந்தரனார், கலித்தொகை நச்சினார்க்கினியர் (உரையும் விளக்கமும்), கழக வெளியீடு, சென்னை முதற்பதிப்பு - 1973.
2. அ.மாணிக்கனார், கலித்தொகை (மூலமும் உரையும்), வர்த்தமானன் பதிப்பகம், தி.நகர், சென்னை - 600017, முதற்பதிப்பு - 1999.
3. இளம்பூரணனார் (உ.ஆ),தொல்காப்பியம் - பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை - 14, முதற்பதிப்பு - 2005.
4. நாகராசன் வி (உ .ஆ), குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்., சென்னை - 600098, முதற்பதிப்பு - 2004.
5. பரிமேலழகர், திருக்குறள், திருமகள் நிலையம், சென்னை - 600001, 1998.
6. முனைவர் ச.முத்துலட்சுமி, அறிவு பதிப்பகம், 142, ஜான்கான் ரோடு, ராயப்பேட்டை, சென்னை -600014.